**Spl.CC.No.**80/2019

06.11.2020 **ஆம் தேதி அன்று சாட்சி P.W.**18 **மீண்டும் மனுவின் பேரில் (CMP.No.** 628/2020) **மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டுஎதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்த நஞ்சியம்பாளையம் கிராமம் தாராபுரம் தாலுக்காவிற்குள் உள்ளது என்றால், சரிதான். எனக்கு உயர்அதிகாரி தாராபுரம் வட்டாட்சியர் ஆவார். எனக்கு பணி நிமித்தம் உத்தரவிடவேண்டும் என்றால், வட்டாட்சியர் தான் உத்தரவிடுவார். வட்டாட்சியருக்கு உயர் அதிகாரி வருவாய் கோட்டாட்சியர் ஆவார். வருவாய் கோட்டாட்சியர் வட்டாட்சியர் மூலமாகத்தான் உத்தரவு வழங்குவார் என்றால், சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக வட்டாட்சியர் எழுத்துபூர்வமான உத்தரவு ஏதும் எனக்கு அனுப்பவில்லை. வருவாய் கோட்டாட்சியரும் எழுத்துபூர்வமான உத்தரவு ஏதும் வழங்கவில்லை. கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்தும் எனக்கு எழுத்துபூர்வமான உத்தரவு ஏதும் வரவில்லை. தாராபுரம் தாலூக்கா என்பது, திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்தது என்றால், சரிதான். ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் காவல் துணை கண்காணிப்பாளரிடமிருந்து எழுத்துபூர்வமான உத்தரவு ஏதும் வரவில்லை என்றால், சரிதான். கோயமுத்தூர் ஊழல் தடுப்புமற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளரை எந்த தேதியில் எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால், 29.11.2011 தேதி மதியம் 2 மணியிலிருந்து 3.00 மணிக்குள்ளாக பார்த்தேன். **DSP** அவர்களை எந்த தேதியில் எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால், 28.11.2011 தேதி மாலை சுமார் 7.00 மணிக்கு தாராபுரம் பயணியர் மாளிகையில்(**Travelers Bungalow**) வைத்து பார்த்தேன். **DSP** யிடமிருந்து எழுத்துபூர்வமான உத்தரவு ஏதும் எனக்கு வரவில்லை. கோட்டாட்சியர் யார் சொல்லி வாய்மொழியாக என்னை அனுப்பினார் என்றால், அது

பற்றி எனக்கு தெரியாது. சோதனை செய்ய சென்ற இடம் எரகாம்பட்டி கிராமம் செம்பேகவுண்டன்பாளையம் ஆகும். செம்பேகவுண்டன்பாளையம் என்பது நான் பணிபுரிந்து வந்த கிராமத்திற்குள் வரும் ஊர் அல்ல. செம்பேகவுண்டன்பாளையம் ஊர் அமைந்துள்ள கிராமத்திற்கென தனியாக கிராம நிர்வாக அதிகாரி உள்ளார் என்றால், சரிதான். அந்த ஊர் எந்த தாலுக்காவை சேர்ந்தது என்றால், தாராபுரம் தாலுக்காவை சேர்ந்தததும் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியரின் ஆள்வரைக்குட்பட்டதும் ஆகும். செம்பேகவுண்டன்பாளையம் செல்லும்போது அந்த ஊருக்கான கிராம நிர்வாக அலுவலரையோ, வருவாய் ஆய்வாளரையோ அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக, உள்ளூர் கிராம நிர்வாக அதிகாரியை தொடர்பு கொண்டு தான் ஓர் இடத்திற்கு சொல்வோம் என்றால், சரிதான். செம்பேகவுண்டன்பாளையத்தில் எத்தனை வீடுகள் இருந்தது, மக்கள் தொகை எவ்வளவு என்ற விவரம் எனக்கு தெரியாது. 28.11.2011 அன்று நான் **DSP** யை பார்க்க சென்றபோது அங்கு வருவாய் ஆய்வாளர் விவேகானந்தன் (**PW**17), **DSP**, மேலும் இரண்டு நபர்கள் இருந்தார்கள். அந்த இரண்டு நபர்கள் குறித்த விவரம் எனக்கு தெரியாது. 29.11.2011 அன்று அர்ச்சுனன் வீட்டை யார் அடையாளம் காண்பித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நாங்கள் **DSP** யுடன் தான் அந்த வீட்டிற்கு சென்றோம். சோதனையிட வேண்டி அர்ச்சுனன் வீட்டிற்கு 29.11.2011 அன்று காலை 7.00 மணிக்கு சென்றபோது தான் முன்னாள் அமைச்சர் திரு.பொங்கலூர். பழனிச்சாமியின் உறவினர் வீட்டை சோதனையிட உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரிந்தது. அந்த விவரத்தை **DSP** அப்போது என்னிடம் சொன்னார். சோதனையிடுவதற்கு முன்பாக உள்ளூர் முக்கிய பிரமுகர்கள் யாரையும் அழைக்கவில்லை. **DSP** அவர்கள் சோதனை செய்வதற்கான அங்கீகார கடிதத்தை வைத்திருந்தார். அதை நான் பார்க்கவில்லை, ஆனால் சோதனைசெய்வதற்கான அங்கீகார கடிதம் இருப்பதாக சொன்னார். அங்கீகார கடிதத்தில் சோதனையின் போது நான் ஒரு சாட்சியாக இருப்பதாக எழுதப்பட்டிருப்பதாக என்னிடம் சொன்னாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. அந்த கடிதம் யாரால் வழங்கப்பட்டது என்பது தற்போது ஞாபகமில்லை. அந்த கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததா அல்லது தமிழ் மொழியில் எழுதப்பட்டிருந்ததா என்றால், ஆங்கில மொழியில் எழுதப்பட்டிருந்தது.

ஆங்கிலத்தில் உள்ள சங்கதியை பழனியம்மாளுக்கு படித்து காண்பித்தார்களா என்றால், கடிதத்தில் உள்ள விவரத்தை சொன்னார்கள். பழனியம்மாளுக்கு கடிதத்தில் உள்ள விவரம் புரியவில்லை, ஆகவே அவரது உறவினர் ஈஸ்வரனை வரசொல்லி, ஈஸ்வரனிடம் கடிதத்தில் உள்ள விவரத்தை சொன்னார்கள். அக்கடிதத்தின் நகலை ஈஸ்வரனுக்கும், பழனியம்மாளுக்கும் கொடுத்தார்களா என்ற விவரம், தற்போது ஞாபகமில்லை. அக்கடிதத்தில் பழனியம்மாளுக்கும், ஈஸ்வரனுக்கும் படித்துக்காண்பிக்கப்பட்டதாக என்று எழுதப்பட்டிருந்ததா என்று , எனக்கு சரியாக ஞாபகமில்லை. முதல் விசாரணை சாட்சியத்திலும், **Addl.S.P** அவர்களது விசாரணையின் போதும், பழனியம்மாளிடமும், ஈஸ்வரனிடமும் படித்து காண்பித்து ஒப்புதல் கடிதம் வாங்கியதாக சொல்லியுள்ளேனா என்றால், ஆம். அவ்வாறுதான் சொல்லியுள்ளேன். சோதனையிட உள்ள இடம் குறித்து வரைபடம் ஏதும் வரைந்தார்களா என்றால், இல்லை. பார்வை மகஜர் தயார் செய்தார்களா என்றால், இல்லை. மகஜர் தயார் செய்தார்கள். **Addl.S.P** விசாரணையிலும், முதல் விசாரணையிலும் பார்வை மகஜர்தயார் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மகஜரை தான் பார்வை மகஜர் என்று நான் சொல்லியுள்ளேன். சாட்சி தற்போது கூறுகிறார் மகஜர் என்று சொன்னதாகவும், பார்வை மகஜர் என்று சொல்லவில்லை என்பதாகத்தான் நினைவில் உள்ளது எனக்கூறுகிறார். பார்வை மகஜரில் எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால், 5 ற்கும் மேற்பட்ட கையெழுத்துக்கள் செய்தேன். வீடு சோதனை ஜாபிதாவில் எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால், அது குறித்து தற்போது ஞாபகமில்லை. பழனியம்மாள் மகஜரில் கடைசி பக்கத்தில் கைரேகை வைத்தார். மற்ற பக்கங்களில் ஏன் பழனியம்மாளிடம் கைரேகை வாங்கவில்லை என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. 2007 வருடத்தை நாட்குறிப்பேடு(**Diary**), கணிணி சிட்டா ஒன்றையும் கைப்பற்றினார்கள். நாட்குறிப்பேடு யாருக்கு சொந்தமானது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. கணிணி சிட்டா யாருக்கு சொந்தமானது என்றால்,பூமிதான வாரியத்தின் பேரில் அது இருந்து. அவ்விரு ஆவணங்களின் அசலையே கைப்பற்றி எடுத்து வந்தார்கள். கைப்பற்றும் மகஜரன் நகலை கொடுத்தார்களா என்றால், பழனியம்மாளிடம் கொடுத்தார்கள். அவ்வாறு கொடுத்ததற்கு எழுதி, ரேகை

வாங்கினார்களா என்றால், ஆம் வாங்கினார்கள். **ExP**18 ஆவணத்தில் நானும், வருவாய் ஆய்வாளர் விவேகானந்தரும்(**PW**17), **DSP**(**PW**16) மட்டுமே கையெழுத்திட்டிருக்கிறோம் என்றால், சரிதான். (**ExP**18 ஆவணத்தை காண்பித்து வினவப்பட்டது). 28.11.2011 தேதியில் நான் பணியாற்றிய கிராமத்தின் பெயர் நஞ்சையம்பாளையம் என கூறியிருப்பது தவறு என்றால் சரிதான். அந்த கிராமத்தின் பெயர் நஞ்சியம்பாளையம் ஆகும். 29.11.2011 அன்று நான் எரகாம்பட்டி கிராமத்திற்கு சென்று அர்ச்சுன் வீட்டை சோதனை செய்ததாகவும், அப்போது நான் சாட்சியாக இருந்ததாக சொல்வதும், **DSP** மற்றும் குழுவினர் வந்து சோதனையிட்டதாக சொல்வதும், **ExP**16 அங்கீகார கடிதத்தை பழனியம்மாளிடமும்,ஈஸ்வரனிடமும் காண்பித்தாக சொல்வதும், **ExP**17 மற்றும் **ExP**18 ஆவணங்கள் தயார் செய்ததாக சொல்வதும், அங்கு ஒரு டைரியும், கணிணி சிட்டாவும் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும், அதில் **DSP** யும்நானும் மற்றும் இதரர்களும் கையொப்பம் செய்து கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தாக சொல்வதும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்ததாக சொல்வதும் பொய் என்றால், சரியல்ல. **ExP**17 மற்றும் **ExP**18 ஆவணங்கள் கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் வைத்துத் தயாரிக்கப்பட்டு அதில் நான் கையெழுத்து செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**Spl.CC.No.**80/2019

06.11.2020 **ஆம் தேதி அன்று சாட்சி P.W.**17 **மீண்டும் மனுவின் பேரில் (CMP.No.** 628/2020) **மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டுஎதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

28.11.2011 ம் தேதியன்று வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன் என்றால், சரிதான். தாராபுரம் வருவாய் கோட்டாட்சியரின் கீழ் பணிபுரிந்த வந்தேன் என்றால், சரிதான். கோயமுத்தூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடமிருந்து எனக்கு அறிவிப்பு ஏதும் வந்ததா என்றால், இல்லை. வழக்கு சம்பந்தமாக தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் எழுத்து பூர்வமாக அறிவிப்பு ஏதும் எனக்கு கொடுத்தார்களா என்றால், இல்லை. தாராபுரம் என்பது திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்தது என்றால், சரிதான். ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் எழுத்துபூர்வமாக உத்தரவு ஏதும் எனக்கு வழங்கினாரா என்றால், இல்லை. வேண்டுகோள் கடிதம் ஏதாவது கொடுத்தாரா என்றால், இல்லை. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை நான் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. தாராபுரம் ஆய்வு மாளிகைக்கு வரசொல்லி எனக்கு யாரும் உத்தரவு கொடுக்கவில்லை என்றால், எழுத்துபூர்வமான உத்தரவு கொடுக்கவில்லை, ஆனால் வாய்மொழி உத்தரவிட்டார்கள். கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் மற்றும் கண்காணிப்பு பிரிவு கோவை அவர்கள் என்னை 29.11.2011 அன்று விசாரித்தார். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது, 28.11.2011 அன்று ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளரின் வேண்டுகோள் கடிதத்தின் பேரில் நான் சென்றதாக சொன்னேனா என்றால், ஆம். அவ்வாறு சொன்னேன். அந்த வேண்டுகோள் கடிதம்இல்லை என்றால், வேண்டுகோள் கடிதத்தை ஈரோடு ஊழல் மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் என்னிடம்

கொடுக்கவில்லை. கோட்டாட்சியரிடம் கொடுத்தார். கோட்டாட்சியரிடம் கொடுத்தாக சொல்லும் வேண்டுகோள் கடிதத்தை நான் பார்த்தேனா என்றால், பார்க்கவில்லை. 28.11.2011 அன்று நான் எந்த இடத்திற்கு எந்த வழக்கு சம்பந்தமாக செல்லவேண்டும் என்பது பற்றி எனக்கு தெரியாது. 29.11.2011 அன்று நான் **SPOT** ற்கு சென்றபோது தான் விவரம் தெரிந்து கொண்டேன். எரகாம்பட்டி என்ற ஊரைதான் நான் **SPOT** என்று குறிப்பிடுகிறேன். எரகாம்பட்டி என்ற ஊர் நான் பணிபுரிந்து வந்த வருவாய் உள் வட்டத்திற்குள் வராது. எரகாம்பட்டி கிராமத்திற்குரிய கிராம நிர்வாக அலுவலரோ, வருவாய் ஆய்வாளரோ அந்த இடத்திற்கு வரவில்லை என்றால், சரிதான். கோட்டாட்சியரின் உத்தரவின் பேரில் காவல் துணை கண்காணிப்பாளரிடம் கடிதம் ஏதேனும் கொடுத்தேனா என்றால், இல்லை. எனது அடையாள அட்டையை காண்பித்து சொன்னேன். எரகாம்பட்டி என்ற கிராமத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால், அது பற்றி துல்லியமாக தெரியாது. அந்த கிராமத்தில் வசித்து வரும் பொதுவான நபர்கள் எவரையேனும் துணை காவல் கண்காணிப்பாளர் அழைத்திருந்தாரா என்றால், நாங்கள் அந்த இடத்திற்கு செல்லும்போது யாரையும் அழைக்கவில்லை. அந்த இடத்திற்கு சென்ற பிறகு அப்பகுதியில் வசிப்பவர்களை துணை காவல் கண்காணிப்பாளர் அழைத்தார். காவல் துணை கண்காணிப்பாளர் அப்பகுதி மக்களை நேரடியாக சென்று அழைக்கவில்லை, பழனியம்மாளிடம் சொல்லி **"உங்கள் தரப்பில் யாராவது இருந்தால்,அவர்களை அழைத்து வாருங்கள்"** என்று சொன்னார். அர்ச்சுனனின் வீடு என்பது ஆவணங்கள் ஏதேனும் பார்த்து தெரிந்துகொண்டோமா என்றால் இல்லை. பழனியம்மாளை விசாரித்ததின் மூலம் தெரிந்து கொண்டோம். பழனியம்மாள் வீட்டை, யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் காவல் துணை கண்காணிப்பாளர் தான் அந்த வீட்டிற்கு அழைத்து சென்றார். காவல்துணை காண்காணிப்பாளர் வைத்திருந்ததாக சொல்லும் அங்கீகார கடிதம் யார் கொடுத்திருந்தார்கள் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் அதை பழனியம்மாளிடம் காவல் துறை கண்காணிப்பாளர் காண்பித்தார். பழனியம்மாளிடம் காண்பிக்கப்பட்டதாக சொல்லும் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். அந்தங்கீகார கடிதத்தில் நான் ஒரு சாட்சியாக வரும் சங்கதி குறிப்பிடபட்டிருந்ததா என்றால்,

அக்கடிதத்தை நான் படித்து பார்க்கவில்லை. அக்கடிதத்தை **DSP** பழனியம்மாளிடம் படித்து காண்பித்தாரா என்றால், ஈஸ்வரனிடமும், பழனியம்மாளிடம் அக்கடிதத்தில் உள்ள விவரத்தை **DSP** சொன்னார். அக்கடிதத்தின் உள்ளடக்கத்தை படித்து காண்பித்து கைரேகையும், கையெழுத்தும் வாங்கப்பட்டதாக கடிதத்தில் எழுதப்பட்டதா என்றால், கையெழுத்தும் கைரோகையும் வாங்கினார்கள், ஆனால், படித்து காண்பிக்கப்பட்டதாக எழுதி அதன் பிறகு கையெழுத்தும், கைரேகையும் வாங்கினார்களா என்பது குறித்து எனக்கு தற்போது ஞாபகமில்லை. அக்கடிதம் தமிழ் மொழியில் எழுதப்பட்டிருந்ததா அல்லது ஆங்கில மொழியில் எழுதப்பட்டிருந்ததா என்றால், அது குறித்து தற்போது ஞாபகமில்லை. அக்கடிதத்தில் கையெழுத்தும், கைரேகையும் பழனியம்மாளிடமும், ஈஸ்வரனிடமும் வாங்கியது குறித்து நான் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேனா என்றால், அந்த ஆவணத்தை பார்த்து தான் சொல்லமுடியும். **ExP**16 ஆவணம் தான் அந்த கடிதமா என்றால், நான் **ExP**16 ஆவணத்தை அந்த சமயத்தில் நான் படித்துபார்க்கவில்லை. **ExP**16 ஆவணத்தில் எனது கையெழுத்துஇல்லை என்றால், சரிதான். (சாட்சியிடம் **ExP**16 ஆவணத்தை காண்பித்து வினவப்பட்டது). **ExP**16 ஆவணத்தைன் நகலை பழனியம்மாளிடமும், ஈஸ்வரனிடமும் கொடுத்தார்களா என்றால், ஆம். கொடுத்தார்கள். **ExP**16 ஆவணத்தில் அவ்வாறு நகல் கொடுக்கப்பட்டதாக குறிப்பு ஏதும் இல்லை என்றால், சரிதான். (சாட்சியிடம் **ExP**16 ஆவணத்தை காண்பித்து வினவப்பட்டது). 28.11.2011 ம் அன்று நான் **DSP** அவர்களை பார்த்தபோது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால், அங்கு **DSP** மட்டும் தான் இருந்தார். **DSP** என்னை ஆய்வு மாளிகைக்கு 29.11.2011 தேதி காலை 5.30 மணிக்கு வருமாறு சொன்னார். கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வருமாறு சொல்லவில்லை. 29.11.2011 தேதி காலை 5.30 மணிக்கு தாராபுரம் ஆய்வு மாளிகைக்கு சென்றபோது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால், பெண் காவலர்கள், காவல் ஆய்வாளக்ள் மற்றும் காவல்துறையை சேர்ந்தவர்கள் இருந்தார்கள். தாராபுரம் ஆய்வு மாளிகையிலிருந்து எரகாம்பட்டி என்ற ஊர் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால், எவ்வளவு தூரம் என்பது எனக்கு தற்போது ஞாபகமில்லை. அந்த இடத்தில் **DSP** வரைபடம் ஏதும் வரைந்தார்களா என்றால், இல்லை. முதல்

விசாரணையிலும், கூடுதல் காவல்கண்காணிப்பாளர் விசாரணையிலும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால், அவ்வாறு சொல்லவில்லை. மகஜர் தயாரித்தார் என்று தான் சொன்னேன். தட்டச்சு பிழையாக பார்வை மகஜர் என தட்டச்சாகியுள்ளது. முதல் விசாரணையில் தவறாக தட்டச்சாகியுள்ளதாக நீதிமன்றத்தில் இதற்கு முன்பாக அல்லது முதல் விசாரணையில் கையெழுத்து செய்வதற்கு முன்பாக தெரிவித்திருக்கிறேனா என்றால், தெரிவிக்கவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் பார்வை மகஜர் என பதிவு செய்யப்பட்டிருந்தால் அது தவறானதா என்றால், ஆம். அது தவறுதான். நான் மகஜர் என்று தான் சொன்னேன். மகஜர் என நான் சொல்வது எத்தனை பக்கங்களில் எழுதப்பட்டது என்றால், ஆவணத்தை பார்த்து தான் சொல்லமுடியும், ஆவணத்தை பார்க்காமல் சொல்லமுடியாது. எத்தனை கையெழுத்துக்கள் அதில் செய்தேன் என்றால், சுமார் 6,7 கையெழுத்துக்கள் செய்தேன். ஆவணத்தை பார்த்தால் தான் சரியாக சொல்லமுடியும். நான் சோதனை சென்ற வீட்டில் எத்தனை அறைகள் இருந்தது என்றால், அது குறித்து தற்போது சரியாக நினைவில்லை. அந்த வீடு எந்த திசை பார்த்துஇருந்தது என்றால், வாசல் வடக்கு பார்த்து இருந்தது. அதன் நுழைவுவாயில் (**Gate**) எந்த திசையில் இருந்தது என்பது தற்போது நினைவில் இல்லை. ஒவ்வொரு பக்கத்திலும் ஈஸ்வரன் கையெழுத்து செய்தார். பழனியம்மாள் மகஜரில் கடைசி பக்கத்தில் கைரேகை வைத்தார். பழனியம்மாளிடம் ஏன் ஒவ்வொரு பக்கத்திலும் கைரேகை வாங்கவில்லை என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. பழனியம்மாளுக்கு எழுதப்பட்டதை படித்து காண்பித்தார்களா என்றால், ஆம். படித்து காண்பித்தார். அவ்வாறு படித்து காண்பித்ததாக மகஜரில் எழுதப்பட்டிருக்கிறதா என்றால், ஞாபகமில்லை. **ExP**17 ஆவணத்தில் அவ்வாறு படித்து காண்பிக்கப்பட்டதாக எழுதப்படவில்லை என்றால் சரிதான். (சாட்சியிடம் **ExP**17 ஆவணத்தை காண்பித்து வினவப்பட்டது). **ExP**17 ஆவணத்தை யார் எழுதினார் என்பது, எனக்கு ஞாபகமில்லை. **ExP**17 ஆவணம் இன்னாரால் எழுதப்பட்டது என்பது குறித்து குறிப்பு ஏதும் இல்லை என்றால், சரிதான். சோதனையின் போது அந்த வீட்டிலிருந்து 2 ஆவணங்களை கைப்பற்றினார்கள். அந்த ஆவணங்கள் யாருக்கு தொடர்புடையது என்பது எனக்கு தெரியாது. அர்ச்சுனனுக்கு சம்பந்தப்பட்ட

ஆவணங்களா என்பது எனக்கு தெரியாது. ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதற்கு மகஜர் தயார் செய்தார்கள். அதில் பழனியம்மாள் கைரேகை வைத்துள்ளாரா என்றால், ஆம். அந்த சோதனை ஜாபிதாவில் நகலை பழனியம்மாளிடம் கொடுத்தார்களா என்றால், ஆம். கொடுத்தார்கள். **ExP**18 ஆவணத்தில் இணைப்பில் நகல் வழங்கப்பட்டதாக குறிப்பு ஏதும் இல்லை என்றால், சரிதான். **ExP**18 இணைப்பில் பழனியம்மாளின் கைரேகையும், ஈஸ்வரனின் கையெழுத்தும் இல்லை என்றால், சரிதான். **ExP**18 அச்சுப்படிவத்தில் ஈஸ்வரனின் கையெழுத்து உள்ளது. வீட்டுக்காரன் அல்லது அவனுடைய பாத்தியஸ்தர் கையெழுத்து சோதனை ஜாபிதாவில் **copy** வாங்கி கொண்டதாக என எழுதப்பட்டுள்ள காலத்தில் ஈஸ்வரனின் கையெழுத்து உள்ளது. **ExP**18 ஆவணத்தில் அச்சுப்படிவத்தில் வீட்டின் உரிமையாளர் என்ற காலத்தில் "என்.அர்ச்சுனன் உறவினர் திரு.ஈஸ்வரன் " என எழுதப்பட்டிருக்கிறது. **ExP**18 அச்சுப்படிவத்தில் **SPOT** என்ற காலத்தில், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தாலுக்கா,செம்பேகவுண்டன்பாளையம் என எழுதப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். கைப்பற்றப்பட்ட 2 ஆவணங்களில் ஒரு ஆவணம் நாள் குறிப்பேடு(**Diary**) ஆகும். அந்த ஆவணம் யாருடையது என்று எனக்கு தெரியாது. இரண்டாவது ஆவணம் கம்பியூட்டர் சிட்டா ஆகும். அது யார் சம்பந்தப்பட்ட சிட்டா என்றால், ஞாபகமில்லை. அதில் அர்ச்சுனின் பெயர் இருந்ததா என்றால் ஞாபகமில்லை. 29.11.2011 அன்று நான் எரகாம்பட்டி கிராமத்திற்கு சென்று அர்ச்சுன் வீட்டை சோதனை செய்ததாகவும், அப்போது நான் சாட்சியாக இருந்ததாக சொல்வதும், **DSP** மற்றும் குழுவினர் வந்து சோதனையிட்டதாக சொல்வதும், **ExP**16 அங்கீகார கடிதத்தை பழனியம்மாளிடமும்,ஈஸ்வரனிடமும் காண்பித்தாக சொல்வதும், **ExP**17 மற்றும் **ExP**18 ஆவணங்கள் தயார் செய்ததாக சொல்வதும், அங்கு ஒரு டைரியும், கணிணி சிட்டாவும் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும், அதில் **DSP** யும்நானும் மற்றும் இதரர்களும் கையொப்பம் செய்து கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தாக சொல்வதும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தாக சொல்வதும் பொய் என்றால், சரியல்ல. **ExP**17 மற்றும் **ExP**18 ஆவணங்கள் கோயமுத்தூர் ஊழல்

தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு அதில் நான் கையெழுத்து செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.